ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1823/22 - 2013 අගෝස්තු මස 13 වැනි අඟහරුවාදා - 2013.08.13

*1823/22 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 13 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ.11/2009.*

**1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டம்**

27அ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்துவாசிக்கப்படும் 1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் 27அ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இத்தால் -

(அ) 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, அரச கமத்தொழிற் கூட்டுத்தாபனச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்ததும் இக்கட்டளைக்கான முதலாம் அட்டவணையில் நன்கு விவரிக்கப்பட்டதும் யட்டவாஹர அல்லது யட்டவேஹெர என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான காணி தொடர்பில் மேற்படிச் சட்டத்தின் 27அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1985, ஏப்பிறல் 9 ஆந் திகதிய 344/5 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை, இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட யட்டவாஹர அல்லது யட்டவேஹெர என அழைக்கப்படும் காணியின் விஸ்தீரணத்தை தொடர்புறுத்துகின்றவாறான சொல்லப்பட்ட கட்டளையின் அத்தகைய பகுதி அத்தகைய சபைக்கு உரித்தாக்கப்படுவதனைக் கருத்திற் கொள்வது தொடர்பிலான அத்தகைய நியதி நிபந்தனைகளுடன் இணங்கியொழுகாமையின் ஏதுக்களின் மீது அதனை இல்லாதொழிப்பதன் மூலம் திருத்துகின்றேன்; அத்துடன்

(ஆ) இல்லாதொழித்தலின் மீது இக்கட்டளைக்கான அட்டவணையின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான காணியின் அத்தகைய விஸ்தீரணம் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு மீண்டும் உரித்தாக்கப்படுதல் வேண்டும் எனக் கூறுகின்றேன்.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**முதலாம் அட்டவணை**

மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு உரித்தாக்கப்பட்ட யட்டவாஹர அல்லது யட்டவேஹெர என அறியப்படும் காணியின் விவரணம்

| அதிவிசேட வர்த்தமானியின் இலக்கமும் திகதியும் | காணியின் பெயர் | நிர்வாக மாவட்டம் | பிரதேசச் செயலாளரின் பிரிவு | மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு அறுதிமாற்றப்பட்ட காணிகளின் விஸ்தீரணம் ஹெக்டேயார் |
|---|---|---|---|---|
| 09.04.1985 இன் 344/5 | யட்டவேஹெர | குருநாகல் | குருநாகல் | 78.65 |

**இரண்டாம் அட்டவணை**

ஆணைக்குழுவுக்கு மீள உரித்தாக்கப்பட்ட காணியின் பாகத்தின் விவரணம்

| குறித்துரைக்கப் பட்ட இலக்கம் | காணியின் பெயர் | நிர்வாக மாவட்டம் | பிரதேசச் செயலாளரின் பிரிவு | ஆணைக்குழுவுக்கு மீள உரித்தாக்கப்பட்ட காணியின் விஸ்தீரணம் |
|---|---|---|---|---|
| கொ/1374 | யட்டவேஹெர | குருநாகல் | குருநாகல் | வடமேல் மாகாணம் குருநாகல் மாவட்டத்தில் குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள யட்டவேஹர கிராமத்தில் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எம். எஸ். ஹேரத் தயாரித்த 2003.03.30 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 4535 A இல் உள்ள துண்டுகள் 01, 02 மற்றும் 03 என காட்டப்படுவதுமான காணியின் துண்டுகளானவை (அதே உத்தரவுபெற்ற நில அளவையாளரால் 1997.01.21 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 4535 இல் உள்ள காணியின் அதே துண்டுகளின் மீள நிலஅளவையானது) வடக்கில் : பூ எல மற்றும் இலங்கோன் அவர்களினால் உரிமைகோரப்பட்ட காணி ; கிழக்கில் : பூ எல மற்றும் இலங்கோன் அவர்களினால் உரிமைகோரப்பட்ட காணி ; தெற்கில் : யட்டவேஹர வத்த பிரிவு 5 மற்றும் மேற்கில் : மாகுரு ஓய ஆகிய எல்லைகளையும் எட்டு தசம் ஆறு மூன்று இரண்டு ஐந்து ஹெக்டேயார் (8.6325 ஹெக்டேயார்) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது. |

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு - 01,
2013, ஓகத்து 12.

8- 925

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.